www.Padasalai.Net www.TrbTnpsc.com
www.surabooks.com

11 ஆம் வகுப்பு

# அரசு பொதுத்தேர்வு மார்ச் – 2025

PART - III

# பொருளியல் (விடைகளுடன்)

பதிவு எண் | | | | | |

கால அளவு : 3.00 மணி நேரம் ] [ மொத்த மதிப்பெண்கள்: 90

**அறிவுரைகள்:** (1) அனைத்து வினாக்களும் சரியாக பதிவாகி உள்ளதா என்பதனை சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிவில் குறையிருப்பின், அறைக் கண்காணிப்பாளரிடம் உடனடியாகத் தெரிவிக்கவும்.

(2) **நீலம்** அல்லது **கருப்பு** மையினை மட்டுமே எழுதுவதற்கும், அடிக்கோடிடுவதற்கும் பயன்படுத்த வேண்டும். படங்கள் வரைவதற்கு பென்சில் பயன்படுத்தவும்.

## பகுதி - I

குறிப்பு : (i) **அனைத்து** வினாக்களுக்கும் விடையளிக்கவும். **20 × 1 = 20**

(ii) கொடுக்கப்பட்டுள்ள நான்கு மாற்று விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்.

**1.** D = 150 – 50P எனில் சாய்வு _______ ஆகும்.

(அ) 5 (ஆ) – 5
(இ) – 50 (ஈ) 50

**2.** தென்னக இரயில்வேயின் தலைமையிடம் _______

(அ) மதுரை (ஆ) திருச்சி
(இ) கோயம்புத்தூர் (ஈ) சென்னை

**3.** கீழ்க்காண்பவற்றுள் எது நிலத்தின் சிறப்பியல்பு அல்ல?

(அ) பலவகைப்படும்
(ஆ) குறை அளிப்பு
(இ) இயற்கையின் கொடை
(ஈ) இயங்கும் தன்மையுடையது

**4.** தொகையீடு என்பது _______ என்பதின் தலைகீழ் செயல்பாடாகும்.

(அ) கலந்த கலவை
(ஆ) வேறுபாடு
(இ) வகையீடு
(ஈ) கலவை

**5.** ஒரு புத்தகம் ₹10 வீதம் 40 புத்தகங்களை ஒரு புத்தக விற்பனையாளர் விற்கிறார், எனில் அவருக்கு கிடைக்கும் மொத்த வருவாய் _______ .

(அ) ₹ 300 (ஆ) ₹ 100
(இ) ₹ 400 (ஈ) ₹ 200

**6.** எந்த ஐந்தாண்டுத்திட்டம் "காட்கில் திட்டம்" என அழைக்கப்பட்டது?

(அ) நான்காம் ஐந்தாண்டுத் திட்டம்
(ஆ) இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம்
(இ) ஐந்தாம் ஐந்தாண்டுத் திட்டம்
(ஈ) மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டம்

**7.** மக்கள் தொகையில் 1961-ஆம் ஆண்டு _______ எனப்படுகிறது.

(அ) நகரமயமாதல் ஆண்டு
(ஆ) சிறிய பிரிவினை ஆண்டு
(இ) பெரும் பிரிவினை ஆண்டு
(ஈ) மக்கள் தொகை வெடிப்பு ஆண்டு

**8.** உழைப்பாளருக்கான வெகுமதி _______ .

(அ) இலாபம் (ஆ) வாரம்
(இ) வட்டி (ஈ) கூலி

**9.** நிறுவனத்தின் சமநிலை என்பது _______.

(அ) MC < MR (ஆ) MC = MR
(இ) MR = Price (ஈ) MC > MR

**10.** கீழ்க்காணும் எவற்றால் தேவை அதிகரிக்கும்?

(அ) வட்டி வீதம் அதிகரிப்பதால்
(ஆ) வரி அதிகரிப்பதால்
(இ) மக்கள் தொகை குறைவதால்
(ஈ) அதிக மானியம் வழங்குவதால்

**11.** பண்டங்கள் மற்றும் பணிகள் வரிவிதிப்பு (GST) முறை இந்தியாவில் நடைமுறைக்கு வந்த ஆண்டு _______.

(அ) 2018 (ஆ) 2016
(இ) 2019 (ஈ) 2017



enquiry@surabooks.com Ph: 8124201000 / 8124301000
Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
www.surabooks.com



**12.** மக்கள் தொகை அடர்த்தி என்பது :

(அ) மக்கள் தொகை/குறிப்பிட்ட நில அளவு

(ஆ) நிலத்தின் அளவு/மக்கள் தொகை

(இ) மக்கள் தொகை/வேலைவாய்ப்பு

(ஈ) நிலத்தின் அளவு/வேலைவாய்ப்பு

**13.** ________ க்கு நெருங்கிய பதிலீட்டுப் பொருள் இல்லை.

(அ) சர்க்கரை

(ஆ) தீப்பெட்டி

(இ) உப்பு

(ஈ) தேனீர்

**14.** கீழ்காண்பவற்றுள் எந்த வகை அங்காடியில் நுகர்வோர் அதிகம் சுரண்டப்படுகிறார்கள்?

(அ) முற்றுரிமையாளர் போட்டி

(ஆ) நிறைவுப் போட்டி

(இ) சில்லோர் முற்றுரிமை

(ஈ) முற்றுரிமை

**15.** கீழ்க்காணும் எந்த விதி, தேவை விதியை அடிப்படையாகக் கொண்டுள்ளது?

(அ) சம இறுதிநிலைப் பயன்பாட்டு விதி

(ஆ) குறைந்து செல் இறுதிநிலைப் பயன்பாட்டு விதி

(இ) காஸன் விதி (ஈ) அளிப்பு விதி

**16.** பொதுவாக எந்தக் கோட்பாடு நுண்ணியல் பொருளாதாரத்தை உள்ளடக்கியுள்ளது?

(அ) வேலைவாய்ப்புக் கோட்பாடு

(ஆ) விலைக் கோட்பாடு

(இ) வணிகக் கோட்பாடு

(ஈ) வருமானக் கோட்பாடு

**17.** போலிவாரம் இதனால் தோன்றுகிறது.

(அ) வீட்டில் தயார் செய்த பொருட்கள்

(ஆ) இறக்குமதிப் பொருட்கள்

(இ) மனிதன் உருவாக்கிய கருவிகள், சாதனங்கள்

(ஈ) இவற்றுள் எதுவுமில்லை

**18.** தேவைக்கு அதிகமாக வேலையில் ஈடுபடும் மக்களின் நிலைமை :

(அ) முழுவேலை (ஆ) வேலையின்மை

(இ) சுயவேலை

(ஈ) மறைமுக வேலையின்மை

**19.** 'நாடுகளின் செல்வத்தையும் காரணங்களையும் குறித்த ஒரு விசாரணை' என்ற நூலின் ஆசிரியர் :

(அ) இலயனல் இராபின்ஸ்

(ஆ) ஆல்ஃபிரட் மார்ஷல்

(இ) பால் அ சாமுவேல்சன் (ஈ) ஆடம் ஸ்மித்

**20.** ஓர் அலகு கூடுதலாக உற்பத்தி செய்வதற்கு ஆகும் செலவு :

(அ) இறுதிநிலைச் செலவு (ஆ) மாறும் செலவு

(இ) மொத்தச் செலவு (ஈ) மாறாச் செலவு

## பகுதி – II

குறிப்பு : **எவையேனும் ஏழு** வினாக்களுக்கு விடையளிக்கவும். வினா எண் 30 -க்கு **கட்டாயமாக விடையளிக்கவும்.**

**[7 × 2 = 14]**

**21.** பண்டங்கள் என்றால் என்ன?

**22.** கிஃபன் பொருள்கள் எவை? அவை ஏன் அவ்வாறு அழைக்கப்படுகின்றன?

**23.** செலவை வரையறுக்கவும்.

**24.** விற்பனைச் செலவு என்றால் என்ன?

**25.** நீர்மை விருப்பத்தின் பொருள் யாது?

**26.** சம உற்பத்திச் செலவுக் கோடு என்றால் என்ன?

**27.** உழைப்பு – வரையறுக்கவும்.

**28.** மாறாச் செலவு என்றால் என்ன?

**29.** கூலியின் வகைகள் யாவை?

**30.** அணிகள் என்றால் என்ன?

## பகுதி – III

குறிப்பு : **எவையேனும் ஏழு** வினாக்களுக்கு விடையளிக்கவும். வினா எண் 40-க்கு **கட்டாயமாக** விடையளிக்கவும்.

**[7 × 3 = 21]**

**31.** பணிகளின் பல்வேறு இயல்புகள் யாவை?

enquiry@surabooks.com Ph: 8124201000 / 8124301000
Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
www.surabooks.com



32. இறுதிநிலை வருவாய் – சிறு குறிப்பு வரைக.

33. காலனி ஆதிக்கத்தின் போது இந்தியாவில் நடைமுறையில் இருந்த பல்வேறு நில உடைமை முறைகள் பற்றித் தெளிவுபடுத்துக.

34. குளிர் பதனக் கிடங்கு பற்றி சிறு குறிப்பு எழுதுக.

35. இடர் தாங்கும் இலாபக் கோட்பாடு – குறிப்பு வரைக.

36. ஆங்கிலேயர் காலத்தில் இந்தியக் கைவினைப் பொருட்கள் உற்பத்தி குறைந்தது ஏன்?

37. ஊரக வேலையின்மையை நீக்குவதற்கான வழிமுறைகளை கூறுக.

38. உடல்நலத் துறையில் தமிழ்நாட்டின் செயல்திறனை விளக்குக.

39. $Y = 5x^4$ என்ற சார்புக்கு $x = 10$ எனும் போது சாய்வு என்ன?

40. உழைப்பின் சிறப்பியல்புகள் யாவை?

## பகுதி – IV

**குறிப்பு : அனைத்து** வினாக்களுக்கும் விடையளிக்கவும். **[7 × 5 = 35]**

41. (அ) பொருளியலின் தன்மையையும், எல்லையையும் விவரிக்கவும்.

**(அல்லது)**

(ஆ) பொருளியல் துறையில் தகவல் தொழில் நுட்பங்கள் எவ்வாறு பயன்படுத்தப்படுகின்றன?

42. (அ) தேவை விதி மற்றும் அதன் விதி விலக்குகளை விவரிக்கவும்.

**(அல்லது)**

(ஆ) நிறைவுப் போட்டியில் விலையும் உற்பத்தி அளவும் எவ்வாறு தீர்மானிக்கப்படுகிறது?

43. (அ) விகித அளவு விளைவு விதியை உதாரணத்துடன் விளக்குக.

**(அல்லது)**

(ஆ) முற்றுரிமையில் விலையும் உற்பத்தி அளவும் எவ்வாறு தீர்மானிக்கப்படுகிறது என்பதை விளக்குக.

44. (அ) இந்தியாவில் ஐந்தாண்டுத் திட்டங்களின் செயல்பாடுகளை விவரிக்கவும்.

**(அல்லது)**

(ஆ) ஊரக பொருளாதாரச் சிக்கல்களை ஆராய்க.

45. (அ) நுகர்வோர் எச்சம் கருத்தை வரைபடத்துடன் விளக்குக.

**(அல்லது)**

(ஆ) செலவுக் கருத்துக்கள் ஏதேனும் ஐந்தினை விவரிக்கவும்.

46. (அ) கீனசின் வட்டிக் கோட்பாட்டை விவரி.

**(அல்லது)**

(ஆ) பொருளாதார முன்னேற்ற கருத்துகளில் ஜவஹர்லால் நேருவின் பங்கை வெளிக் கொணர்க.

47. (அ) சிறப்புப் பொருளாதார மண்டலங்களின் நோக்கங்களையும், பண்புகளையும் விளக்குக.

**(அல்லது)**

(ஆ) மக்கள் தொகையின் தரம் சார்ந்த சிறப்புகளை விவரிக்கவும்.

❖ ❖ ❖

# விடைகள்

## பகுதி – I

1. (இ) -50
2. (ஈ) சென்னை
3. (ஈ) இயங்கும் தன்மையுடையது
4. (இ) வகையீடு
5. (இ) 400
6. (ஈ) மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டம்
7. (ஈ) மக்கள் தொகை வெடிப்பு ஆண்டு
8. (ஈ) கூலி
9. (ஆ) MC = MR
10. (ஈ) அதிக மானியம் வழங்குவதால்
11. (ஈ) 2017
12. (அ) மக்கள் தொகை/குறிப்பிட்ட நில அளவு
13. (இ) உப்பு
14. (ஈ) முற்றுரிமை

enquiry@surabooks.com Ph: 8124201000 / 8124301000
Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
www.surabooks.com



15. (ஆ) குறைந்த செல் இறுதிநிலைப் பயன்பாட்டு விதி

16. (ஆ) விலைக் கோட்பாடு

17. (இ) மனிதன் உருவாக்கிய கருவிகள், சாதனங்கள்

18. (ஈ) மறைமுக வேலையின்மை

19. (ஈ) ஆடம் ஸ்மித்

20. (அ) இறுதிநிலைச் செலவு

## பகுதி – II

21. ♦ மனித விருப்பத்தை நிறைவு செய்யும் எதுவும் பொருளியலில் பண்டங்களாக கருதப்படுகின்றன.

♦ பண்டங்கள் தொட்டுணரக்கூடியவை, உருவ வடிவமுடையவை, அதன் உரிமையாளரிடமிருந்து தனித்துக் காணப்படும். மாற்றக் கூடியவை, பரிமாற்ற மதிப்பு உடையவை.

22. ♦ கிஃபன் பண்டங்கள் அல்லது தாழ்ந்தரக பண்டங்கள் தேவை விதியின் விதி விலக்காகும்.

♦ தாழ்ந்தரக பண்டங்களின் விலை குறையும்போது ஏழைகள் அவற்றைக் குறைவாகவும் மேலும் விலை கூடும்போது அதிகம் வாங்குவர்.

(எ.கா.) அரிசி, ராகி.

23. ♦ செலவு என்பது உற்பத்திச் செலவைக் குறிக்கும்.

♦ ஒரு பொருளை உற்பத்திச் செய்யும் போது ஏற்படுகின்ற பல்வேறு வகையான செலவினங்கள் உற்பத்திச் செலவு ஆகும்.

♦ உற்பத்திச் செலவினை ஆய்வு செய்யும் போது அதனுடன் தொடர்புடைய பல்வேறு காரணிகளையும் அறிந்து கொள்ளவேண்டும்.

(எ.கா.) நிறுவனத்தின் அளவு.

24. முற்றுரிமைப்போட்டியில் நிறுவனங்கள் தங்கள் உற்பத்தி பண்டத்தின் விற்பனையை அதிகரிக்க அதிக விளம்பரங்களை செய்வதற்காக மேற்கொள்ளும் விளம்பரச் செலவுகள் அனைத்தும் விற்பனைச் செலவுகள் எனப்படுகின்றன.

25. நீர்மை விருப்பம் என்பது மக்கள், பத்திரங்கள், பங்குகள், மாற்றுச்சீட்டுகள், நிலம், கட்டிடம், தங்கம் போன்றவைகளாக அல்லாமல் ரொக்க பணமாக கையில் வைத்திருக்க விரும்புவதே ஆகும்.

26. ♦ ஒரு நிறுவனம் குறிப்பிட்ட அளவு பணச்செலவில் வாங்கக்கூடிய இரு காரணிகளின் பல தொகுப்புகளைக் குறிப்பிடுவதே சம உற்பத்திச் செலவுக் கோடு ஆகும்.

♦ இதனை 'சம விலைக்கோடு' அல்லது 'சமவருவாய்க் கோடு' அல்லது 'சம செலவுக்கோடு' அல்லது 'மொத்த உற்பத்தி வளைகோடு' எனவும் அழைக்கலாம்.

27. மார்ஷலின் கூற்றுப்படி, உழைப்பு என்பது உற்பத்திக் காரணியான உழைப்பாளர் வருமானம் ஈட்டுவதற்காக தனது உழைப்புச் சக்தியைப் பயன்படுத்துவதாகும்.

28. ♦ மாறாச் செலவுகள் உற்பத்தி மாற்றத்திற்கு ஏற்ப மாறுபடுவதில்லை.

♦ அதாவது மாறாக் காரணிகளுக்காக செய்யப்படும் செலவுகள் மாறாமல் நிலையாக இருக்கும்.

(எ.கா.) நிறுவனத்தின் வாடகை, காவலரின் ஊதியம்.

29. கூலி நான்கு வகைகளாகப் பிரிக்கப்படுகிறது.

(அ) பெயரளவுக் கூலி அல்லது பணக்கூலி

(ஆ) உண்மைக்கூலி

(இ) துண்டுக்கூலி

(ஈ) நேரக்கூலி

30. அணி என்பது ஒருமை வடிவம். அணிகள் என்பது பன்மை வடிவமாகும். அணிகள் என்பது செவ்வக வடிவில் ( ) அடைப்புக் குறிக்குள் நிரைகளாகவும், நிரல்களாகவும் வரிசைப்படுத்தப்பட்ட எண்களின் தொகுப்பாகும்.

## பகுதி – III

31. **பணிகளின் இயல்புகள் :**

♦ **கண்ணுக்குப் புலனாகாதவை:** புலனாகாப் பொருட்களுக்கு உருவ அடையாளம் இல்லை. ஆனால் மற்ற பண்டங்களோடு தொடர்புடையவை. (எ.கா.)அடையாள குறியீடு, நிறுவன நன்மதிப்பு.

♦ **பலதரப்பட்டவை:** பணிகள் பல்வேறு இடங்கள் மற்றும் கலாச்சாரப் பின்னணியில் வேறுபடுகின்றன.
(எ.கா.) இசை மற்றும் மருத்துவர் சேவை

♦ **பணிகளை உருவாக்குபவரிடமிருந்து பிரிக்க இயலாது:** பணிகள் அவற்றை செயல்படுத்துபவருக்கே உரியவை.
(எ.கா) உழைப்பாளரிடமிருந்து உழைப்பை பிரிக்க இயலாது.

♦ **அழியக்கூடியவை:** பண்டங்களை போன்று பணிகளை சேமித்து வைக்க இயலாது.
(எ.கா.) மட்டை பந்து விளையாட்டை காண வழங்கப்பட்ட கட்டண விலை விளையாட்டு முடிந்த பிறகு பயன்தராது.

enquiry@surabooks.com Ph: 8124201000 / 8124301000
Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
www.surabooks.com



**32.** ♦ இறுதிநிலை வருவாய் என்பது, பண்டத்தை ஓர் அலகு கூடுதலாக விற்பனை செய்வதால் மொத்த வருவாயில் ஏற்படும் கூடுதல் இறுதிநிலை வருவாய் எனப்படும்.

♦ மொத்த வருவாயில் ஏற்படும் மாற்றத்தை மொத்தப் பண்டங்களின் அளவில் ஏற்படும் மாற்றத்தால் வகுத்தால் இறுதிநிலை வருவாய் கிடைக்கும்.

$MR_n = TR_n - TR_{n-1}$ அல்லது

$MR = TR_{n+1} - TR_n = \Delta TR$

இதில்

$TR_n$ = 'n' அலகிற்கான மொத்த வருவாய்

$TR_{n-1}$ = n-1அலகிற்கான மொத்த வருவாய்

$TR_{n+1}$ = n+1 அலகிற்கான மொத்த வருவாய்

விலை மாறாத போது TR=PQ, $MR = \Delta TR/\Delta Q = P$, எனவே AR –க்குச் சமமாக இருக்கும்.

**33.** ♦ விடுதலைக்கு முன் மூன்று விதமான நில உடைமை முறைகள் இருந்தன.

♦ அவை ஜமீன்தாரி முறை, மகல்வாரி முறை மற்றும் இரயத்துவாரி முறை ஆகும்.

**ஜமீன்தாரி முறை அல்லது நிலச்சுவான்தாரி முறை :**

♦ ஜமீன்தாரி முறையை ஆங்கிலக் கிழக்கிந்திய கம்பெனி உருவாக்கியது.

♦ இம்முறையில் நிலச்சுவான்தாரர்களும், ஜமீன்தாரர்களும் நிலத்தின் சொந்தக்காரர்களாக அறிவிக்கப்பட்டு நில வருவாயை அரசுக்குச் செலுத்த வேண்டிய முழுப்பொறுப்பும் அவர்களிடமே வழங்கப்பட்டது.

♦ வசூலிக்கப்பட்ட நிலவருவாயில் 11ல் 10 பங்கு அரசுக்குச் செலுத்தப்பட வேண்டும் என்றும் மீதத் தொகை ஜமீன்தாரர்களுக்கான ஊதியமாகவும் அறிவிக்கப்பட்டது.

**மகல்வாரி முறை அல்லது இனவாரி முறை :**

♦ இம்முறையில் கிராம மக்களாலான குழுவினர் நிலச் சொந்தக்காரர்களாக இருந்து நிருவாகம் செய்தனர்.

♦ அக்குழுவினர் நிலத்தை உழவர்களிடம் பிரித்துக் கொடுத்து அவர்களிடமிருந்து வருவாயைப் பெற்று அரசுக்குச் செலுத்தினர்.

**இரயத்துவாரி முறை அல்லது சொந்த சாகுபடி முறை :**

♦ இம்முறையில் நிலத்தைச் சொந்தம் கொண்டாடும் உரிமையும், நிலத்திற்கான கட்டுப்பாடும், நில உரிமையாளரிடமே இருந்தது.

♦ உரிமையாளர்களிடம் நேரடியான தொடர்பு இருந்தது.

♦ விடுதலைக்கு முன்னர் இம்முறை குறைந்த அடக்குமுறை உடையதாக இருந்தது.

**34.** ♦ பழங்களின் உற்பத்தியில், இந்தியா உலக அளவில், மிகப் பெரிய உற்பத்தியாளராகவும், காய்கறிகள் உற்பத்தியில் இரண்டாவது மிகப் பெரிய உற்பத்தியாளராகவும் விளங்குகிறது.

♦ இருந்த போதிலும், அறுவடைக்குப் பின்னால் ஏற்படும் 25% முதல் 30% வரையிலான இழப்புகளினால், தனியொருவருக்குக் கிடைக்கக் கூடிய பழங்களின் காய்கறிகளின் அளவு மிகக்குறைவாகவே உள்ளது.

♦ அது தவிர நுகர்வோரை அடையும் நேரத்தில் பண்டத்தின் தரம் கனிசமான அளவில் குறைகிறது. விரைவில் அழுகும் தன்மையுடைய பழங்களையும் காய்கறிகளையும் அங்காடிப்படுத்துவதில் பல சிக்கல்கள் ஏற்படுகின்றன.

♦ இது அதிக வணிகச் செலவுகள், அங்காடிகளில் தேக்கம், விலையில் ஏற்றத்தாழ்வுகள் மற்றும் பல சிக்கல்களுக்கும் காரணமாக அமைகிறது.

♦ இந்த சிக்கல்களைத் தீர்க்க, இந்திய அரசும் வேளாண் அமைச்சகமும், 1955 ஆம் ஆண்டு "குளிர்பதன கிடங்கு ஆணை 1964" என்பதை ஏற்படுத்தியது..

**35.** **இடர் தாங்கு இலாபக் கோட்பாடு:**

♦ அமெரிக்க பொருளியல் அறிஞர் F.B. ஹாலே 1907-ல் இடர்தாங்கும் இலாபக் கோட்பாட்டை எடுத்துரைத்தார்.

♦ அவரின் கருத்துப்படி, வணிகத்தில் இடர்களை எதிர்கொள்வதற்கான வெகுமதியே இலாபம் எனப்படும்.

♦ ஒரு தொழில் முனைவோரின் பணிகளில் இடர்களை எதிர்கொள்ளல் மிக முக்கிய பணி ஆகும்.

♦ ஆதலால் தொழில் முனைவோர் இடர்களை எதிர்கொண்டு இலாபத்தைப் பெறுகிறார்கள்.

enquiry@surabooks.com Ph: 8124201000 / 8124301000
Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
www.surabooks.com



- இலாபமும் அதிகமாகப் பெற வேண்டுமெனில் இடர்களை அதிகமாக சமாளிக்க வேண்டும்.
- இலாபமே தொழில்முனைவோரை இடர்பாடுகளை எதிர்கொள்ளத் தூண்டுகிறது.

**36.**
- பாகுபாடான சங்க வரிக்கொள்கை மூலம் பிரிட்டிஷ் அரசு வேண்டுமென்றே இந்தியக் கைவினைப் பொருட்களை அழித்தது.
- நவாப் ஆட்சியும் அரசர்கள் ஆட்சிக் காலமும் முடிவுக்கு வந்தவுடன், இந்தியக் கைவினைப் பொருட்களைப் காப்பாற்ற எவருமில்லாத நிலை ஏற்பட்டது.
- இந்தியக் கைவினைப் பொருட்களால் இயந்திரத் தயாரிப்பு பொருட்களுடன் போட்டியிட முடியவில்லை.
- இந்தியாவில் இரயில்வே அறிமுகமான பின் பிரிட்டிஷ் பொருட்களுக்கான உள்நாட்டு சந்தை அதிகரித்தது.

**37. வேலையின்மைக்கான தீர்வுகள்:**

**(1) துணைத் தொழில்கள் :**
- பருவகால வேலையின்மையைத் தவிர்க்க ஊரக மக்களை, துணைத் தொழில்களைத் தொடங்குவதற்கு ஊக்கப்படுத்த வேண்டும்.
- கடன் வசதிகளை ஏற்படுத்திதர வேண்டும்.

**(2) ஊரக வேலைத்திட்டம் :**

வேலையற்றவர்களுக்கு ஆக்கப்பூர்வமான வேலை வாய்ப்புகளை உருவாக்கலாம்.

**(3) நீர்ப்பாசன வசதிகள் :**

போதிய மழையளவு இல்லாததால், நீர்ப்பாசன வசதியினைப் பயன்படுத்தி பலவகைப் பயிர்களை பயிர் செய்யும் முறையினைக் கையாள வேண்டும்.

**(4) ஊரக தொழில் மயமாக்கல் :**

வேலை வாய்ப்பினை உருவாக்க ஊரகப் பகுதிகளில் புதிய தொழிற்சாலைகளை அமைக்க வேண்டும்.

**(5) தொழில்நுட்பக்கல்வி :**

இளைஞர்களை சொந்தமாகத் தொழில் தொடங்க வழிவகை செய்ய வேண்டும்.

**38.**
- தமிழ்நாடு மூன்றடுக்கு உடல் நல அடிப்படைக் கட்டமைப்பைக் கொண்டுள்ளன.
- அவை மருத்துவமனைகள், ஆரம்ப சுகாதார நிலையங்கள், சமூக நல மையங்கள் ஆகியனவாகும்.
- மார்ச் 2015ஆம் ஆண்டில் தமிழகத்தில் 34 மாவட்ட மருத்துவமனைகளும், 229 துணை மருத்துவமனைகளும், 1254 ஆரம்ப சுகாதார நிலையங்களும், 7555 துணை நிலையங்களும், 313 சமூக நல மையங்களும் உள்ளன.
- எடுத்துக்காட்டாக பெரும்பான்மை மக்களுக்குப் பரவலாகப்பட்டுள்ள பொது விநியோகத்திட்டம், மதிய உணவுத்திட்டம், பொது சுகாதாரக் கட்டமைப்பு போன்றவற்றின் மூலம் நலத்தை மேம்படுத்துவதை இங்கு குறிப்பிடலாம்.

**39.** தீர்வு:

$Y = 5x^4$ ; சாய்வு = $\frac{dy}{dx}$

$\frac{dy}{dx} = 5\,(4)x^{4-1}$

$= 20x^3$

$x=10$

என இருக்கும் போது சாய்வு $= 20(10)^3$

$= 20 \times 1000$

சாய்வு $= 20{,}000$

**40. உழைப்பின் சிறப்பியல்புகள் :**
- உழைப்பு அழியக்கூடியது.
- உழைப்பை "உழைப்பாளரிடமிருந்து" பிரிக்க இயலாது.
- உழைப்பு இடங்களுக்கிடையேயும், தொழில்களுக்கிடையேயும் மெதுவாக நகரக்கூடியது.
- உழைப்பு இடம் பெயரக்கூடியது.

## பகுதி – IV

**41. (அ) பொருளியலின் தன்மைகள் :**

பொருளியலின் இயல்பினை குறிப்பிட்ட சில பொருளியல் அறிஞர்களின் பல்வேறு வரையறைகளைப் படிப்பதன் மூலம் புரிந்து கொள்ளலாம்.

- **செல்வ இலக்கணம் :**

**ஆடம்ஸ்மித் (1723 – 1790):** ஆடம்ஸ்மித் "நாடுகளின் செல்வத்தின் இயல்பும், காரணங்களும் பற்றிய ஓர் ஆய்வு" (1776) எனும் தனது நூலில் செல்வத்தைப் பற்றிய ஓர் அறிவியல் என்று வரையறுத்துள்ளார்.

enquiry@surabooks.com Ph: 8124201000 / 8124301000
Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
www.surabooks.com



- **நல இலக்கணம் :**

  **ஆல்ஃபிரட் மார்ஷல் (1842-1924):** ஆல்ஃபிரட் மார்ஷல் தன்னுடைய பொருளியல் கோட்பாடுகள் என்னும் நூலில், பொருளியல் என்பது மனிதனின் அன்றாட நடவடிக்கையை படிப்பதும், பொருள்சார் நலனை அடைவதின் பொருட்டு தனிமனிதன் மற்றும் சமுதாயத்தின் செயல்பாட்டை குறித்து ஆராய்வதும் ஆகும். பொருளியல் ஒருபுறம் செல்வத்தை பற்றியும், மறுபுறம் மனிதனைப் பற்றியும் ஆராய்கிறது.

- **கிடை பருமை (பற்றாக்குறை) இலக்கணம்:**

  **இலயனல் இராபின்ஸ் :** இலயனல் ராபின்ஸ் "பொருளியல் அறிவியலின் தன்மையும் அதன் சிறப்பும் பற்றிய ஒரு கட்டுரை எனும் தமது நூலை 1932ல் வெளியிட்டார்". பொருளியல் என்பது "விருப்பங்களோடும் கிடைப் பருமையுள்ள மாற்று வழிகளில் பயன்படக்கூடிய பற்றாக்குறையான சாதனங்களோடும் தொடர்புடைய மனித நடவடிக்கைகளைப் பற்றி படிக்கும் ஓர் அறிவியலே" ஆகும்.

- **வளர்ச்சி இலக்கணம் :**

  **சாமுவேல்சன் :** சாமுவேல்சன், பொருளியல் என்பது "மனிதனும் சமுதாயமும் பணத்தை பயன்படுத்தியோ அல்லது பயன்படுத்தாமலோ, மாற்றுவழிகளில் பயன்படக்கூடிய பற்றாக்குறையான வளங்களைக் கொண்டு பல்வேறு பண்டங்களை உற்பத்தி செய்து, அவற்றை தற்காலத்திலும், எதிர்காலத்திலும், மக்களுக்கிடையேயும் சமுதாயக் குழுக்களுக்கிடையேயும் நுகர்விற்காக எவ்வாறு பகிர்ந்தளிப்பது" என்பதை தெரிவு செய்யும் இயலாகும் என வரையறை செய்கிறார்.

- **பொருளியலின் எல்லை :** பொருளியலின் எல்லை என்பது பொருளியலின் பாடப் பொருளாகும். பொருளியல் ஒரு கலையா அல்லது ஓர் அறிவியலா மற்றும் அறிவியலாக இருப்பின் அது இயல்புரையியலா அல்லது நெறியுரையியலா என்பதை இங்கு தெளிவுபடுத்துகிறது. இது பண்டங்கள் மற்றும் பணிகளின் நுகர்வு, உற்பத்தி மற்றும் உற்பத்திக் காரணிகளுக்கான வருமானப் பகிர்வு ஆகியவைகளை ஆராய்கிறது.

- **பொருளியல் என்பது ஒரு கலை மற்றும் அறிவியல்:** பொருளியல், சிக்கல்களின் காரண விளைவுகளுக்கு இடையேயுள்ள உறவுகளைப் பற்றி ஆராய்கிறது. இயற்பியல், வேதியியலைப் போன்றே பொருளியலும் ஓர் அறிவியல் என்று இராபின்ஸ், ஜோர்டன் மற்றும் ராபர்ட்சன் போன்றோர் கருதுகின்றனர். ஆகையால் பொருளியல் கலை மற்றும் அறிவியலாக கருதப்படுகிறது.

- **பொருளியல், இயல்புரை அறிவியல் மற்றும் நெறியுரை அறிவியல் :**

  **இயல்புரை அறிவியல் :** 'உள்ளதை உள்ளவாறு' கூறுகிறது. பிரச்சினைகள் உண்மையின் அடிப்படையில், அதன் காரணங்களின் மூலம் ஆய்வு செய்கிறது.

  **நெறியுரை அறிவியல் :** 'எதுவாக இருக்க வேண்டும்' என்ற வினாவிற்கு விடையளிப்பதாக உள்ளது. இங்கு முடிவுகள் உண்மையின் அடிப்படையில் அமைவதில்லை.

**(அல்லது)**

### (ஆ) தகவல் தொடர்பு தொழில் நுட்பம்

- தகவல் தொடர்பு தொழில் நுட்பம் என்பது தகவல்களை விரைவாகவும், துல்லியமாகவும் தொகுக்கக்கூடிய ஓர் உள்கட்டமைப்பாகும்.
- பின்வரும் அட்டவணையில் ICT யின் தொழில்நுட்பக் கருவிகள் மற்றும் பணிகளின் பயன்களைக் காணலாம்.

| வ. எண் | தகவல் | தொழில்நுட்பக் கருவிகள் மற்றும் பணிகள் |
|---|---|---|
| 1. | உருவாக்கம் | தனிப்பட்ட கணினிகள், டிஜிட்டல் கேமரா, ஸ்கேனர், ஸ்மார்ட் போன் |
| 2. | செயலாக்கம் | கால்குலேட்டர், PC, ஸ்மார்ட் போன் |
| 3. | சேமிப்பு | CD, DVD, பென் டிரைவ், மைக்ரோசிப் , கிளவ்டு |
| 4. | காட்சிப்படுத்தல் | PC, TV, Projector, ஸ்மார்ட்போன் |
| 5. | ஊடகவழி பரிமாற்றம் | இணையம், டெலிகான்பரன்ஸ், வீடியோ கான்பரன்ஸ், மொபைல், தொழில் நுட்பம், வானொலி |
| 6. | தகவல் பரிமாற்றம் | e-mail, அலைபேசி |

- ICT வளர்ச்சி ஐந்து கட்டங்களை கடந்துள்ளது. அவை,

(1) கணினி
(2) PC
(3) நுண் செயலி

enquiry@surabooks.com Ph: 8124201000 / 8124301000
Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
www.surabooks.com



(4) இணையம் மற்றும்
(5) வயர்லெஸ் தொடர்புகள்

- புள்ளி விவரங்களை தொகுத்தல், ஒழுங்குற அமைத்தல், கையாளுதல், கணக்கிடுதல் மற்றும் முடிவுகளை காட்சிப்படுத்துதல் ஆகிய கணித மற்றும் புள்ளியியல் கருத்துகள் பொருளியலுக்கு தேவைப்படுகின்றன.
- அவற்றை தகவல் தொடர்புத் தொழில் நுட்பம் (ICT) வேகமாகவும், அதிகமாகவும், துல்லியமாகவும் செய்கிறது.
- பொதுவாக SPSS மற்றும் Excel தொகுப்புகள் பொருளியல் ஆய்வாளர்களால் பயன்படுத்தப்படுகின்றன.

**42.** (அ) **தேவை விதி :**

தேவை விதியை முதலில் 1838ல் அகஸ்டின் கூர்னாட் விளக்கினார். பின் ஆல்ஃப்ரட் மார்ஷல் இதைச் சீர்படுத்தி விரிவாக்கினார்.

**இலக்கணம் :**


'மற்றவை மாறாமல் இருக்கும்போது, ஒரு பொருளுக்கான விலை குறையும்போது மக்கள் அப்பொருளை அதிகம் வாங்குவர், விலை ஏறும்போது குறைவாக வாங்குவர்' – சாமுவேல்சன்.

**தேவை விதியின் எடுகோள்கள் :**

- நுகர்வோர் வருமானத்தில் மாற்றமில்லை.
- நுகர்வோரது சுவையிலும் தேர்ந்தெடுத்த மற்றும் பழக்கத்திலும் மாற்றமில்லை.
- பிறபொருட்களின் விலையில் மாற்றமில்லை.
- பிற பதிலிகள் இல்லை.
- பண்டத்தின் தரத்தில் எவ்வித மாற்றமும் இல்லை. கொடுக்கப்பட்ட அனுமானங்களில் ஏதேனும் ஒன்றில் மாற்றம் ஏற்பட்டாலும் இவ்விதி செயல்படாது.

**தேவை அட்டவணை**

| விலை ₹ | தேவை அளவு (அலகுகள்) |
|---|---|
| 5 | 1 |
| 4 | 2 |
| 3 | 3 |
| 2 | 4 |
| 1 | 5 |





**வரைபட விளக்கம் :**


- X அச்சில் பண்டம் அளவும், Y அச்சில் விலையும் குறிப்பிடப்படுகின்றன.
- DD என்பது தேவைக் கோடாகும்.
- தேவை அளவு கீழ் நோக்கிச் சரிந்து செல்கிறது. அதாவது இடமிருந்து வலமாக கீழ் நோக்கிச் சரிகிறது.

**பண்டத்திற்கான அங்காடித் தேவை :**


**A என்பவரது தேவை**





**B என்பவரது தேவை**




**C என்பவரது தேவை**




**அங்காடித் தேவை**




அங்காடியில் உள்ள அனைத்து தனிமனிதர்களின் தேவை அளவினை ஒன்று கூட்டினால் பண்டத்திற்கான அங்காடித் தேவை வளைகோட்டினைப் பெறலாம்.

**தேவை விதியின் விதிவிலக்குகள் :**

பொதுவான தேவை வளைகோடு இடமிருந்து வலமாக கீழ்நோக்கிச் சரியும். ஆனால் சில விதிவிலக்கு தேவைக் கோடுகள் இந்த விதிக்கு கட்டுப்படாமல் மாறிச் செயல்படும்; குறிப்பிட்ட சில பண்டங்களின் விலை

enquiry@surabooks.com Ph: 8124201000 / 8124301000
Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com


குறைவு தேவை சுருக்கத்தையும், விலை உயர்வு தேவை விரிவையும் ஏற்படுத்தும். இந்நிலையில் தேவைக்கோடு இடமிருந்து வலமாக மேல்நோக்கி உயரும். இது விதிவிலக்கான தேவைக்கோடு என அழைக்கப்படுகிறது.

**(அல்லது)**

**(ஆ)** நிறைவுப் போட்டி அங்காடியின் கீழ் இயங்கும் நிறுவனங்கள், தொழிற்சாலையில் நிர்ணயிக்கப்பட்ட விலை (எ.கா. – ₹10ஐ) ஏற்றுக்கொண்டு தங்கள் உற்பத்தியை அதற்கேற்றாற் போல் அனுசரித்து செல்வர். $Qd = 100 - 5P$ சமநிலையில் $Qd = Qs$

$Qs = 5\ (10)\ \therefore Qs = 50.$

**தொழிற்சாலை நிறுவனம் I நிறுவனம் II**




SS = அங்காடி அளிப்பு
DD = அங்காடித் தேவை
AR = சராசரி வருவாய்
AC = சராசரிச் செலவு
MR = இறுதிநிலை வருவாய்
MC = இறுதிநிலைச் செலவு

**முதலாம் பகுதி :**

அனைத்து நிறுவனங்களின் தேவை மற்றும் அளிப்பு சக்திகள் சந்திக்கின்றன இதில் நிலையான விலையாக ₹10 ஆக நிர்ணயிக்கப்படுகிறது. தொழிற்சாலையின் சமநிலை உற்பத்தி 50 அலகுகள் ஆகும்.

**இரண்டாம் பகுதி :**

வரைபடத்தில் AC கோடு, விலைக்கோட்டை விட குறைவாக உள்ளது. MC = MR நிலையில் சமநிலை அடைகிறது. சமநிலையில் உற்பத்தி அலகு 50 – ஆகவும், விலை ₹10 ஆகவும், சராசரி செலவு ₹8 ஆகவும், சராசரி வருவாய் ₹10 ஆகவும் உள்ளது. உற்பத்தி பண்டத்திற்கு நிர்ணயிக்கப்பட்ட விலையில் (₹10) நிறுவனம் மிகை இலாபம் அடைகிறது.

**மூன்றாம் பகுதி :**

வரைபடத்தில் நிறுவனத்தின் செலவு கோடு விலைக்கோட்டிற்கு மேலே உள்ளது. சமநிலைக்கான நிபந்தனை MR = MC–ஆக உள்ளபோது நிறைவடைகிறது. ஏற்கனவே உள்ள அதே விலையில் (₹ 10), 50 – பண்டங்கள் விற்பனை செய்யப்படுகிறது. அப்போது நிறுவனம் நட்டம் அடைகிறது. (AC>AR)

**43. (அ) விகித அளவு விளைவு விதி :**

- நீண்ட காலத்தில் அனைத்து உற்பத்திக் காரணிகளும் மாறக்கூடியவை.
- அனைத்து உற்பத்திக் காரணிகளும் அதிகரிக்கும் போது வெளியீட்டில் அதிகரிப்பு ஏற்படலாம்.
- இவ்விரண்டிற்கும் உள்ள தொடர்பை விளக்குவதே விகித அளவு விளைவு விதியாகும்.

**ஊகங்கள் :**

- தொழில் அமைப்பைத் தவிர அனைத்து உற்பத்திக் காரணிகளும் மாறக்கூடியவை.
- தொழில் நுட்பத்தில் மாற்றம் இல்லை.
- நிறைவுப் போட்டி நிலவுகிறது.
- உற்பத்தி பருமஅலகுகளால் அளவிடப்படுகிறது.

**விகித அளவு விளை விதியின் மூன்று நிலைகள் :**


(i) **வளர்ந்து செல் விகித அளவு :** உள்ளீடுகள் 1 விழுக்காடு உயரும்போது வெளியிடுகள் 1 விழுக்காட்டுக்கு மேல் உயர்கிறது.

(ii) **மாறாத விகித அளவு :** அனைத்து உற்பத்திக் காரணிகளும் 1 விழுக்காடு உயரும்போது வெளியிடு பொருளும் அதே அளவு சம விகித அளவில் 1 விழுக்காடு உயரும்.

(iii) **குறைந்த செல் விகித அளவு :** அனைத்து உற்பத்திக் காரணிகளும் 1 விழுக்காடு உயரும் போது வெளியிடு 1 விழுக்காட்டிற்கு குறைவாக உயருகிறது.

| நிலைகள் | உள்ளிடு | வெளியிடு | விகித விளைவு |
|---|---|---|---|
| a to b | 100% ↑ | 200% ↑ | வளர்ந்து செல் |
| b to c | 100% ↑ | 100% ↑ | மாறா |
| c to d | 100% ↑ | 33.33% ↑ | குறைந்து செல் |

**விகித அளவு விளைவு விதியின் வரைபடம்**



www.Padasalai.Net www.TrbTnpsc.com
www.surabooks.com



**வரைபட விளக்கம் :**


- புள்ளி $a$ க்கும் $b$ க்கும் இடையேயான பகுதி வளர்ந்து செல் விகித விளைவு விதியை குறிக்கிறது.
- $q$=1 லிருந்து $q$=3 வரை இதற்காக 1 அலகு உழைப்பும் 1 அலகு மூலதனமும் அதிகமாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன.
- புள்ளி $b$ க்கும் $c$ க்கும் இடையே உள்ள பகுதி மாறா விகித அளவு விளைவு விதியை குறிக்கிறது.
- இங்கு உழைப்பும், மூலதனமும் 100% அதிகமாகப் பயன்படுத்தி வெளியீட்டின் அளவும் 100%ஆக அதிகரிக்கப்படுகிறது.
- புள்ளி $c$ லிருந்து $d$ வரை உள்ள பகுதி குறைந்து செல் விகித அளவு விளைவு விதியை குறிக்கிறது.
- உற்பத்திக் காரணிகளை 4 லிருந்து 8 அலகாக இருமடங்கு உயர்த்தும் போது அதிகரித்த வெளியிடு உள்ளீட்டின் உயர்வைவிட குறைவாகும். அதாவது 33.33 விழுக்காடு வெளியிடு கூடியுள்ளது ($q$=6 லிருந்து $q$=8 வரை).

**(அல்லது)**

(ஆ) **முற்றுரிமையில் விலை மற்றும் உற்பத்தி நிர்ணயம்:**

- முற்றுரிமையில் நிறுவனமே தொழிற்சாலையாகும்.
- அதனால் முற்றுரிமை நிறுவனம் கீழ்நோக்கிச் சரியும் தேவை வளைகோட்டை (AR) கொண்டுள்ளது.
- இறுதிநிலை வருவாய் வளைகோடு (MR), AR வளைகோட்டிற்கு கீழ் அமைந்துள்ளது (MR < AR).
- ஒரு முற்றுரிமையாளர் இறுதிநிலைச் செலவைவிட இறுதிநிலை வருவாய் அதிகமாக இருக்கும் வரை (MR >MC) தொடர்ந்து உற்பத்தி செய்து விற்கின்றார்.
- இங்கு சமநிலை உற்பத்தியானது MC = MR ஆகும்.
- சமநிலை புள்ளிக்கு மேல் உற்பத்தியாளர் நட்டம் ஏற்படும் என்பதை எதிர்பார்த்து விற்பனையை நிறுத்திக்கொள்வார்.

**முற்றுரிமையில் விலை மற்றும் உற்பத்தி நிர்ணயம்**




**வரைபட விளக்கம் :**

- X – அச்சில் உற்பத்தி அளவும், Y–அச்சில் செலவு / விலையும் குறிக்கப்பட்டுள்ளது.
- மேற்காணும் வரைபடத்தின் படி 3 அலகு உற்பத்தி விற்பனை செய்யப்படுகிறது.
- MR, MC யை விட அதிகமாக இருக்கும் வரை உற்பத்தி நடக்கும்.
- முற்றுரிமை நிறுவனம் சமநிலை MR = MC ஆக இருக்கும்வரை உற்பத்தியை மேற்கொள்ளும்) அப்போது விலை ₹23/- ஆக உள்ளது.
- சமநிலை உற்பத்தியில் ஒரு முற்றுரிமை நிறுவனம் எவ்வாறு இலாபம் பெறுகிறது என்பதைப் பார்க்க சராசரி வருவாய் கோடு மற்றும் சராசரி செலவுக் கோட்டை பயன்படுத்தலாம். எடுத்துக்கொண்ட உற்பத்தியான 3 அலகிற்கு சராசரி வருவாய் ₹23/- ஆகும்.
- சராசரி செலவு ₹12.67

  ∴ (23-12.67=10.33) ஓர் அலகிற்கான இலாபம்.
- மொத்த இலாபம் = (சராசரி வருவாய் – சராசரி செலவு) மொத்த உற்பத்தி

  = (23-12.67) × 3

  = 10.33 × 3 = ₹30.9

**44. (அ) முன்னுரை:**

- பொருளாதார திட்டமிடலின் நோக்கம் வரையறுக்கப்பட்ட அளவிலான வளங்களைத் திறம்படப் பயன்படுத்தி விரும்பிய இலக்குகளை அடைதலாகும்.

**முதல் ஐந்தாண்டுத் திட்டம் (1951 - 1956) :**

- இது ஹாரோட் டாமர் மாதிரியை அடிப்படையாகக் கொண்டது.
- முதன் முதன்மை நோக்கம் நாட்டின் வேளாண்மை முன்னேற்றமாகும்
- இத்திட்டம் 3.6 % வளர்ச்சி வீதத்துடன் (இலக்கை விட அதிகம்) வெற்றி பெற்றது.

**இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம் (1956 - 1961) :**

- இத்திட்டம் PC மஹலநோபிஸ் மாதிரியை அடிப்படையாகக் கொண்டது.

enquiry@surabooks.com Ph: 8124201000 / 8124301000
Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
www.surabooks.com



- ♦ இதன் முதன்மை நோக்கம் நாட்டின் தொழில் முன்னேற்றத்தை மேம்படுத்துவதாகும்.
- ♦ இத்திட்டம் 3.6 % வளர்ச்சியுடன் வெற்றி பெற்றது.

**மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டம் (1961-1966):**

- ♦ இத்திட்டம் "காட்கில் திட்டம்" என்றும் அழைக்கப்பட்டது.
- ♦ இதன் முதன்மை நோக்கம் சுதந்திரமான பொருளாதாரம் மற்றும் சொந்த முன்னேற்ற நிலையை ஏற்படுத்துதல் ஆகும்.

**நான்காம் ஐந்தாண்டுத் திட்டம் (1969 - 1974) :**

- ♦ இத்திட்டத்தின் இரண்டு முக்கிய நோக்கங்கள், நிலையான வளர்ச்சியும், தற்சார்பு நிலையை அடைதலும்.
- ♦ இத்திட்டம் அதன் இலக்கான 5.7 % வளர்ச்சியை எட்டாமல் 3.3 % வளர்ச்சியை மட்டுமே பெற்று.

**ஐந்தாம் ஐந்தாண்டுத் திட்டம் (1974 - 1979) :**

- ♦ இத்திட்டத்தில் வேளாண்மைத் தொழில்துறை, சுரங்கத் தொழில் ஆகியவற்றுக்கு முன்னுரிமை வழங்கப்பட்டது.
- ♦ ஒட்டுமொத்தமாக நோக்குகையில் 4.8 % வளர்ச்சி பெற்று இத்திட்டம் வெற்றி பெற்றது.

**ஆறாம் ஐந்தாண்டுத் திட்டம் (1980 - 1985) :**

- ♦ இத்திட்டத்தின் அடிப்படை நோக்கம் வறுமை ஒழிப்பும் தொழில்துறை தற்சார்பும் ஆகும். "வறுமை ஒழிப்பு" என்பதே இதன் இலட்சியமாகும்.
- ♦ இது முதலீட்டுத் திட்டத்தை அடிப்படையாக கொண்டது.
- ♦ இத்திட்டத்தின் வளர்ச்சி 5.7% எட்டப்பட்டது.

**ஏழாம் ஐந்தாண்டுத் திட்டம் (1985 - 1990) :**

- ♦ இத்திட்டத்தின் நோக்கம் தன்னிறைவுப் பொருளாதாரத்தை உருவாக்குதல், ஆக்கப்பூர்வமான வேலைவாய்ப்பை வழங்குதல்.
- ♦ இத்திட்டத்தின் வளர்ச்சி 6.0% காணப்பட்டது.

**எட்டாம் ஐந்தாண்டுத் திட்டம் (1992 - 1997) :**

- ♦ எட்டாம் ஐந்தாண்டுத் திட்டத்தில் வேலைவாய்ப்பு, கல்வி, சமூகநலம் முதலான மனித வள மேம்பாடு நடவடிக்கைகளுக்கு முன்னுரிமை கொடுக்கப்பட்டது.
- ♦ இத்திட்ட காலத்தில் இந்தியாவிற்கான புதிய பொருளாதாரக் கொள்கை அறிமுகப்படுத்தப்பட்டது.
- ♦ இத்திட்டத்தின் வளர்ச்சி 6.8% எட்டப்பட்டது.

**ஒன்பதாம் ஐந்தாண்டுத் திட்டம் (1997 - 2002):**

- ♦ சமூக நீதியுடன் கூடிய சமமான வளர்ச்சிக்கு இத்திட்டத்தில் முக்கிய கவனம் கொடுக்கப்பட்டது.
- ♦ இந்திய பொருளாதாரம் 5.6% வளர்ச்சியை மட்டுமே அடைந்தது.

**பத்தாம் ஐந்தாண்டுத் திட்டம் (2002 - 2007) :**

- ♦ பத்தாம் ஐந்தாண்டுத் திட்டம் அடுத்த பத்தாண்டுகளில் தலா வருவாயை இரு மடங்காக உயர்த்த இலக்கு நிர்ணயித்தது.
- ♦ இத்திட்டம் 2012 ஆம் ஆண்டில் வறுமை விகிதத்தை 15% ஆக்க குறைக்கும் குறிக்கோளைக் கொண்டிருந்தது.
- ♦ இத்திட்டத்தின் வளர்ச்சி 7.2% எட்டப்பட்டது.

**பதினொன்றாம் ஐந்தாண்டுத் திட்டம் (2007 - 2012) :**

- ♦ பதினொன்றாம் ஐந்தாண்டுத் திட்டத்தின் முக்கிய நோக்கம் "விரைவான, அதிகமான உள்ளடக்கிய வளர்ச்சியாகும்."
- ♦ இத்திட்டத்தின் வளர்ச்சி 7.9% எட்டப்பட்டது.

**பன்னிரெண்டாம் ஐந்தாண்டுத் திட்டம் (2012 - 2017) :**

- ♦ பன்னிரெண்டாம் ஐந்தாண்டுத் திட்டத்தின் முதன்மை நோக்கம் "விரைவான அதிகமான உள்ளடக்கிய மற்றும் நிலையான வளர்ச்சியே" ஆகும்.
- ♦ இதன் வளர்ச்சி இலக்கு 8% ஆகும்.

**(அல்லது)**

(ஆ) **ஊரக பொருளாதாரத்தில் உள்ள சிக்கல்கள் :**

**(1) மக்கள் தொடர்புடைய சிக்கல்கள் :**

எழுத்தறிவின்மை, போதிய தொழில்நுட்ப அறிவின்மை, நம்பிக்கை குறைவு, பற்றுகள், நம்பிக்கைகள் இவற்றைச் சார்ந்து வாழ்க்கைத்தரம் அமைதல் ஆகியன ஊரக மக்களின் சிக்கல்களாகும்.

enquiry@surabooks.com Ph: 8124201000 / 8124301000
Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com

www.surabooks.com



**(2) வேளாண்மை சார்ந்த சிக்கல்கள் :**

- ♦ எதிர்பார்த்த அளவில் விழிப்புணர்வு, வேளாண் அறிவு, திறன், மனப்போக்கு ஆகியவை இன்மை.
- ♦ உள்ளிடு பொருள்கள் கிடைக்கப்பெறாமை.
- ♦ அங்காடிப்படுத்தும் வசதிகள் குறைவு.
- ♦ பற்றாக்குறையானப் பணியாளர்கள், பணிகள்.
- ♦ பன்முகத் திறன் கொண்ட பணியாளர்கள் இன்மை.

**(3) உள்கட்டமைப்பு சார்ந்த சிக்கல்கள் :**

ஊரகப் பகுதிகளில் உள்கட்டமைப்பு வசதிகளான நீர், மின்சாரம், போக்குவரத்து, கல்வி, நிறுவனங்கள், செய்தித் தொடர்பு, மருத்துவ வசதி, வேலை வாய்ப்பு, பண்டக சேமிப்பு வசதி, வங்கி, காப்பீடு போன்ற வசதிகள் போதுமானதாக இல்லை.

**(4) பொருளாதாரம் சார்ந்த சிக்கல்கள் :**

அதிகச் செலவு பிடிக்கும் தொழில் நுட்பங்கள், உள்ளிடுகளைப் பயன்படுத்த இயலாமை, நலிவடைந்த ஊரக தொழிற்சாலைகள் குறைவான வருமானம், கடன் சுமை, நிலவுடைமையிலும், சொத்துகளிலும் உள்ள ஏற்றத்தாழ்வு ஆகியவற்றை ஊரகப் பகுதிகளில் காணப்படும் பொருளாதாரம் சார்ந்த சிக்கல்களாக உள்ளன.

**(5) தலைமை சார்ந்த சிக்கல்கள் :**

- ♦ ஊரகப் பகுதிகளில் தலைமை தொடர்பான சிக்கல்கள் உள்ளன.
- ♦ தகுதியற்ற, செயல்படாதவர்கள் தலைமைப் பொறுப்பை வகிப்பு போன்றவை ஆகும்.

**(6) நிர்வாகம் சார்ந்த சிக்கல்கள் :**

- ♦ அரசியல் தலையீடு, ஊக்கமின்மை, ஆர்வமின்மை, குறைந்த கூலி, வரவு செலவுகளை சரிவர முறையாகப் பயன்படுத்தாமை.
- ♦ கிராமப்புறவறுமை, கிராமப்புறவேலையின்மை, கிராமப்புற தொழிற்சாலைகள், சிறு நிதி, ஊரக நலம், உடல்நலம், ஊரக உள்கட்டமைப்பு வசதிகள் தொடர்பான சிக்கல்கள் விரிவான விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்படுகின்றன.


**45.** (அ)

ஆல்ஃபிரட் மார்ஷல் இக்கோட்பாட்டினை விரிவாகத் தந்துள்ளார். குறிப்பிட்ட விலையில் மக்கள் பண்டங்களை வாங்கிடும் அளவிற்கான தொடர்பினை தேவைச்சார்பு P(x) காட்டுகிறது.

இதனை $P = F(x)$ எனலாம்.

நுகர்வோர் உபரி என்பது ஒருவர் கொடுக்க நினைக்கும் விலைக்கும் உண்மையில் கொடுத்த விலைக்கும் இடையேயான வேறுபாடாகும்.

இதனை பின்வரும் வரைபடம் காட்டுகிறது.




நுகர்வோர் உபரியினை கணிதரீதியில் பின்வருமாறு வரையறுக்கலாம்.

CS = ($x = 0$ முதல் $x = x_0$ வரையிலான தேவை வளைகோட்டிற்கு உட்பட்ட பரப்பு) − (செவ்வகம் $OX_0BP_0$ யின் பரப்பு)

$$CS = [\int_0^{x0} p(x)dx] - x_0p_0$$

**(அல்லது)**

(ஆ) **பணச் செலவு :**

உற்பத்திச் செலவுகள் பணத்தால் குறிப்பிடப்பட்டால் அவை பணச்செலவு எனப்படும். வேறுவகையில் கூறினால், ஒரு நிறுவனம் ஒரு பொருளை உற்பத்தி செய்யப் பணமாக செலவிடுகின்ற அனைத்துச் செலவுகளுமே பணச் செலவு எனப்படுகிறது. பணச் செலவில் கச்சாப்பொருள்களுக்கான செலவுகள் உழைப்பிற்கான கூலி, சம்பளம், கட்டடங்களுக்கான வாடகை, மூலதனத்திற்கான வட்டி, எரிபொருள், மின்சக்திக்கான செலவு, போக்குவரத்துச் செலவுகள், உற்பத்திச் சார்ந்த பிற செலவுகள் ஆகியவை அனைத்தும் பணச் செலவு எனப்படும்.

enquiry@surabooks.com Ph: 8124201000 / 8124301000

Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
www.surabooks.com



**உண்மைச் செலவு :**

உண்மைச் செலவு என்பது அனைத்து காரணிகளின் உரிமையாளர்கள் எதிர்கொள்ளும், சங்கடங்கள், முயற்சிகள் மற்றும் தியாகங்களுக்காக அக்காரணிகளின் உடமையாளருக்கு வழங்கப்படும் இழப்பீட்டுத்தொகையாகும்.

**வெளிப்படையான செலவு/ செலுத்தப்பட்ட செலவு :**

உற்பத்திக்காரணிகளை வாங்க மற்றவர்களுக்கு செலுத்தும் செலுத்துகையே வெளிப்படையான செலவு எனப்படும். அதாவது ஒரு நிறுவனம் தன்னுடைய உற்பத்திக்கு தேவையான காரணிகளை விலைக்கு வாங்கியோ அல்லது வாடகைக்கு அமர்த்தியோ உற்பத்தியை மேற்கொள்ளும் போது ஏற்படும் ஒட்டு மொத்தச் செலவு வெளிப்படையான செலவு எனப்படும்.

**உள்ளார்ந்தச் செலவு :**

நிறுவனத்திற்குச் சொந்தமான உற்பத்தி வளங்களுகு வழங்கப்படும் ஊதியம் உள்ளார்ந்த செலவு எனப்படும். உள்ளார்ந்த செலவு என்பது மறைந்திருக்கும் செலவு அல்லது ஏட்டுச் செலவு என்றும் அழைக்கப்படும்.

**பொருளாதாரச் செலவு :**

ஒரு நிறுவனத்தின் உற்பத்திக்கு உறுதியான அளிப்பை முறைப்படுத்தும் சொந்த வளங்கள், விலைக்கு வாங்கப்பட்ட அல்லது வாடகைக்கு அமர்த்தப்பட்ட உற்பத்திக் காரணிகளுக்கு ஆகும் செலவுகள் பொருளாதாரச் செலவுகள் எனப்படும்.

**46.** (அ) **கீன்ஸ் நீர்மை விருப்பம் :**

♦ கீன்ஸ் 1936ல் அவருடைய புகழ்பெற்ற வேலைவாய்ப்பு, வட்டி, பணம் பற்றிய பொதுக்கோட்பாடு என்ற நூலில் நீர்மை விருப்ப வட்டிக் கோட்பாட்டை எடுத்துரைத்துள்ளார்.

♦ கீன்ஸ் கூற்றுப்படி, வட்டி என்பது முழுமையாக பணவியலோடு தொடர்புடைய கருத்து. ஏனெனில் வட்டி விகிதம் பண அளவிலேயே அளவிடப்படுகிறது. அவருடைய கருத்தின்படி, "நீர்மைத் தன்மையின் பகுதியை குறிப்பிட்ட காலத்திற்கு விட்டுக்கொடுப்பதற்காக வழங்கப்படும் வெகுமதியே வட்டி ஆகும்."

**நீர்மை விருப்பத்தின் விளக்கம் :**

நீர்மை விருப்பம் என்பது மக்கள் பத்திரங்கள், பங்குகள், மாற்றுச்சீட்டுகள், நிலம், கட்டிடம், தங்கம் போன்றவைகளாக அல்லாமல் ரொக்க பணமாக கையில் வைத்திருக்க விரும்புவதே ஆகும்.

**பணத்தேவையின் நோக்கங்கள் :**

கீன்ஸ் கூற்றுப்படி, நீர்மை விருப்பத்திற்கு மூன்று நோக்கங்கள் உள்ளன. அவை,

**பரிமாற்ற நோக்கம் :**

♦ மக்கள் அன்றாட பரிவர்த்தனைக்காக பணத்தை ரொக்கமாக வைத்திருப்பதின் விருப்பமே பரிமாற்ற நோக்கமாகும்.

♦ இந்த நோக்கத்திற்காக பணம் சேமிக்கும் அளவு வருமான அளவைச் சார்ந்துள்ளது.

$M_t = f(y)$

**முன்னெச்சரிக்கை நோக்கம் :**

நோய்வாய்ப்படுதல், விபத்து, தீப்பற்றுதல், திருட்டு போன்ற எதிர்பாராத செலவுகளை சந்திப்பதற்காக மக்கள் பணத்தை ரொக்கமாக வைத்திருப்பதற்கான இந்த நோக்கம் முன்னெச்சரிக்கை நோக்கம் எனப்படும்.

$M_p = f(y)$

**ஊக நோக்கம் :**

♦ முதலீட்டுச் சந்தையில் பங்குகள், பத்திரங்கள் ஆகியவற்றின் எதிர்கால விலை மாற்றத்திற்கேற்ப அதனுடைய நன்மைகளைப் பெற மக்கள் ரொக்கமாக வைத்திருக்க வேண்டியுள்ளது இதுவே ஊக நோக்கமாகும்.

♦ இந்த நோக்கத்திற்காக கையில் சேமிப்பாக வைத்திருக்கும் தொகையின் அளவு வட்டி விகிதத்தைப் பொருத்து அமையும்

$M_s = f(i)$

**பணத்தின் தேவை மற்றும் அளிப்பிற்கிடையேயான சமநிலை :**


♦ நீர்மை விருப்பம் மற்றும் பணத்திற்கான தேவை ஆகிய இரண்டும் சமநிலையான வட்டி விகிதத்தை தீர்மானிக்கின்றன.

♦ பண அளிப்பு மாறாது இருப்பதாக அனுமானிக்கிறோம்.

enquiry@surabooks.com Ph: 8124201000 / 8124301000
Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
www.surabooks.com







**வரைபட விளக்கம் :**

- LP என்பது நீர்மை விருப்பக் கோடாகும்.
- $M_2$ என்பது ஊக நோக்கத்திற்கான பண அளிப்புக் கோட்பாடாகும்.
- நீர்மை விருப்பம் LP யிலிருந்து $L_1P_1$ ஆக உயர்ந்தால் பண அளிப்பானது மாறாமல் இருப்பதால் வட்டி விகிதம் OI லிருந்து $OI_1$ ஆக உயரும்.
- எனவே எளிமையான புரிதலுக்காக $M_s$ பணத்தேவை மற்றும் பண அளிப்பை எடுத்துக் கொண்டு சமநிலை வட்டி வீதத்தைக் காணலாம்.

***Ans.***




- பண அளிப்பு $OM_2$ ஆக இருக்கும் போது வட்டி $Ol_2$ ஆக இருக்கும். பண அளிப்பு $OM_2$ லிருந்து $OM_3$ ஆக குறைக்கப்படும்போது வட்டி $Ol_2$ லிருந்து $Ol_3$ ஆக உயரும்.
- பண அளிப்பு $OM_2$ லிருந்து $OM_4$ ஆக உயர்கிற பொழுது வட்டி $Ol_2$ லிருந்து $Ol_4$ ஆக குறையும்.

**குறைபாடுகள் :**

- குறிப்பிட்ட ஒரு காலத்திலேயே பல்வேறுபட்ட வட்டி விகிதம் சந்தையில் இருப்பதை இக்கோட்பாடு விளக்கத் தவறிவிட்டது
- குறுகிய கால வட்டி வீதம் பற்றி மட்டுமே இது விளக்குகிறது.

**(அல்லது)**

(ஆ) **ஜவஹர்லால் நேருவின் பொருளாதாரச் சிந்தனை :**

- புதிய இந்தியாவைக் கட்டமைத்த முதன்மை சிற்பிகளில் ஒருவர் ஜவஹர்லால் நேரு ஆவார்.
- இந்தியாவின் முதல் பிரதம அமைச்சராவார்.
- அவருடைய பொருளாதார கருத்துக்கள், அவர் ஆற்றிய எண்ணற்ற உரையாடல்களிலும், புத்தகங்களிலிருந்தும் தெரிய வந்தது.

www.Padasalai.Net

www.Padasalai.Net www.TrbTnpsc.com
www.surabooks.com


(i) **மக்களாட்சியும், மதச்சார்பின்மையும் :**

- ♦ மக்களாட்சி முறையை உறுதியாக நம்பியவர் ஜவஹர்லால் நேரு.
- ♦ பேச்சுரிமை, குடிமக்கள் உரிமை, வாக்குரிமை, சட்டத்தின் வழி ஆட்சி மற்றும் பாராளுமன்ற மக்களாட்சி ஆகியவற்றை நம்பியவர்.
- ♦ மதச்சார்பின்மை என்பது எல்லா மதங்களுக்கும் சமமான மரியாதை அளித்தல் ஆகும் என்கிறார்.

(ii) **திட்டமிடுதல் :**

- ♦ திட்டமிடுதலை நம் நாட்டில் அறிமுகப்படுத்திய பெருமை ஜவஹர்லால் நேருவையேச் சேரும்.
- ♦ ஒரு நாட்டின் அணுகுமுறைக்கு, திட்டம் அவசியம் என்று அவர் கருதினார்.
- ♦ "திட்டமிடுதலின் சாரம் என்பது மனித சக்தி வளங்கள், பணம் இவற்றை சிறந்த வழிகளில் பயன்படுத்துவதை குறிக்கும்" என்கிறார்.
- ♦ திட்டமிடுதல் என்பது தொழில்மயமாதலோடு தொடர்புடையது.
- ♦ நேரு திட்டமிட்ட வளர்ச்சி பெற இந்த யுக்தியை முன்னெடுக்கிறார்.
- ♦ "அறிவியல், ஆராய்ச்சி, தொழில் நுட்பம், தொழில் வளர்ச்சி" ஆகியவற்றில் நேருவின் பங்களிப்பு மறக்க முடியாது.

(iii) **ஜனநாயக சமதர்மம் :**

- ♦ சமதர்மத்திற்கு நேருவின் பங்களிப்பு மிகப்பெரியதாகும்.
- ♦ நம் இந்தியாவை சமதர்ம சமூகமாக கட்டமைக்க விரும்பினார்..

**47.** (அ) **நோக்கங்கள் :**

- ♦ வெளிநாட்டு முதலீட்டை அதிகரிக்க, முக்கியமாக வெளிநாட்டு நேரடி முதலீட்டை ஈர்த்து, நம் நாட்டில் மொத்த உள்நாட்டு உற்பத்தி (GDP) யை அதிகரித்தல்.
- ♦ பன்னாட்டு வணிகத்தில் / உலக ஏற்றுமதியில் நமது பங்கினை அதிகரித்தல்.
- ♦ கூடுதல் பொருளாதார நடவடிக்கைகளை உருவாக்குதல்.
- ♦ வேலைவாய்ப்புகளை உருவாக்குதல்.
- ♦ கட்டமைப்பு வசதிகளை உருவாக்குதல்.
- ♦ உலக அங்காடித் தொழில்நுட்பங்களை பகிர்ந்து கொள்ளுதல்.

**முக்கிய பண்புகள் :**

- ♦ பாதுகாப்புடன் கூடிய நிலப்பகுதிகள்.
- ♦ தனி அமைப்பால் நிருவகிக்கப்படுவது.
- ♦ நெறிமுறைப்படுத்தப்பட்ட நடைமுறைகள்.
- ♦ தனிப்பட்ட விருப்பப் பகுதியைக் கொண்டது.
- ♦ தாராளமய பொருளாதார சட்டத்தால் நிருவகிக்கப்படுகிறது.
- ♦ இதில் அமையப்பெற்ற நிறுவனங்களுக்கு அதிக அளவு சுதந்திரம் கொடுக்கப்பட்டுள்ளது.
- ♦ எனவே அரசின் சட்டதிட்டங்களையும், கட்டுப்பாடுகளையும் கடைப்பிடிக்க வேண்டிய அவசியமில்லை. இதனால் சமூகமும், சுற்றுப்புறச் சூழல்களும் பாதிக்கப்படுகின்றன.

**(அல்லது)**

enquiry@surabooks.com Ph: 8124201000 / 8124301000
Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
www.surabooks.com


(ஆ) 2011 மக்கள் தொகைக் கணக்கெடுப்பின்படி இந்தியாவிலுள்ள 121 கோடி மக்கள் தொகையில் 7.21 கோடி மக்கள் தொகையுடன் தமிழ்நாடு ஆறாவது இடத்தில் உள்ளது.

**பாலின விகிதம் (1000 ஆண்களுக்கான பெண்களின் எண்ணிக்கை) :**

- சமச்சீர் பாலினவிகிதம் என்பது பெண்கள் வாழ்வியல் மேம்பாடு அடைந்திருப்பதைக் குறிக்கிறது.
- தமிழ்நாட்டின் பாலின விகிதம் 995 ஆகும்.
- பிற மாநிலங்களோடு ஒப்பிடும்போதும் இந்திய அளவிலும் இந்த விகிதம் மிக அதிகமாகும்.

**குழந்தை இறப்பு விகிதம் :**

- தமிழகத்தில் குழந்தைகளின் இறப்பு வீதம் மற்ற மாநிலங்களைவிட குறைவாக உள்ளது.
- நிதி ஆயோக் அறிக்கையின்படி 2016 ஆம் ஆண்டில் தமிழ்நாட்டின் குழந்தை இறப்பு விகிதம் 17 ஆகும்.

**மகப்பேறு இறப்பு விகிதம் :**

மகப்பேறு காலத்தில் தாயின் இறப்பு விகிதத்தைக் கட்டுப்படுத்துவதில் இந்திய அளவில் தமிழ்நாடு 79 எண்ணிக்கையுடன் மூன்றாவது இடத்தில் உள்ளது.

**வாழ்நாள் எதிர்பார்ப்புக் காலம் :**

- சராசரியாக ஒருவரின் எதிர்பார்க்கப்படும் வாழ்நாள் அளவே ஆயுட்காலம் என்று அழைக்கப்படுகிறது.
- வளர்ந்த நாடுகளோடு ஒப்பிடும்போது இந்திய மக்களின் சராசரி ஆயுட்காலம் குறைவு.
- தமிழ்நாட்டு மக்களின் ஆயுட்காலம் 70.6 ஆண்டுகள் (ஆண் - 68.6, பெண் 72.7) ஆக உள்ளது.

**எழுத்தறிவு நிலை :**

தமிழ்நாட்டின் எழுத்தறிவு மற்ற இந்திய மாநிலங்களோடு ஒப்பிடும்போது முன்னேறிய நிலையில் உள்ளது.

❖ ❖ ❖

enquiry@surabooks.com Ph: 8124201000 / 8124301000
Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com